AIRPuducherry/regionalnewsbulletibtamil/6.10pm/16.08.2017/script

வணக்கம்
ஆல் இண்டியா ரேடியோ, புதுச்சேரி
மாநிலச் செய்திகள்,
வாசிப்பவர் : நாராயணசாமி
தேதி : 16,08.2017 நேரம் : மாலை : 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மெட்ரோ ரயில் திட்டத்தை நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு நீட்டிப்பதற்கான புதிய மெட்ரோ ரயில் கொள்கையை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

புதுவையில் டிஜுர் இணைப்பு தினம் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

புதுவைக்கும் – ஹைதராபாத்திற்கும் இடையே தனியார் விமான சேவை இன்று முதல் மீண்டும் தொடங்கி உள்ளது.

புதுவையில் கரமாற்று அறுவை சிகிச்சியை வெற்றிகரமாக செய்து முடித்துள்ள ஜிப்மர் நிபுணர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே.பி. நட்டா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

---

நாட்டின் பல்வேறு நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டுவருவதற்கான மத்திய அரசின் புதிய மெட்ரோ ரயில் கொள்கையை மத்திய அமைச்சரவை இன்று அங்கீகரித்துள்ளது. அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட

முடிவுகள் குறித்து நிதியமைச்சர் திரு. அருண்ஜேட்லி செய்தியாளர்களிடம் பேசுகையில் புதிய மெட்ரோ ரயில் கொள்கையால் மேக் இன் இண்டியா திட்டத்தை ஊக்குவிக்கவும் திட்டப் பணிகளை குறைந்த செலவில் திறம்பட்ட முறையில் நிறைவேற்றவும் ஏதுவாகும் என்றார். பல்வேறு நகரங்களில் துரித ரயில் போக்குவரத்து உள்ளிட்ட இதர திட்டங்களுக்கான சாத்திய கூறுகளையும் ஆராய்ந்து எல்லா வகையிலும் பொருத்தமான திட்டத்தை தேர்ந்தெடுக்க புதிய கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். தற்போது நாட்டின் 7–நகரங்களில் மொத்தம் 370–கிலோ மீட்டர் மெட்ரோ ரயில் பாதைகள் பயன்பாட்டில் இருப்பதும் 12–நகரங்களில் மொத்தம் 537–கிலோ மீட்டர் மெட்ரோ ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலும் சில முக்கிய முடிவுகள்.

– கிழக்கு இந்தியப் பகுதிகளில் வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஜார்கண்டில் 1972–ஆம் ஆண்டு தொடக்கப்பட்டு பாதியிலேயே கைவிடப்பட்ட வடகோயல் நீர்த் தேக்க திட்டம் முற்றிலுமாக நிறைவேற்றி முடிக்கப் படும். இதற்கு ஏதுவாக நீண்ட கால அடிப்படையிலான நீர்ப்பாசன நிதிக்கு நடப்பு ஆண்டில் 9–ஆயிரத்து 20–கோடி ருபாய் கூடுதல் பட்ஜெட் நிதி வழங்கப்படும்.

– வடகிழக்கு பிராந்தியத்திலும் இமயமலைப் பகுதி மாநிலங்களிலும் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு அடுத்த 10–ஆண்டுகளுக்கு வரிவிலக்கு வழங்கும் வகையில் இந்நிறுவனங்கள் செலுத்தும் ஜிஎஸ்டி திருப்பி அளிக்கப்படும்.

தமிழக அரசின் மலிவுவிலை அம்மா உணவகம் போல கர்நாடக அரசின் இந்திரா கேண்டீன் திட்டத்தை இன்று பெங்களூரில் காங்கிரஸ் துணைத் தலைவர் திரு. ராகுல் காந்தி தொடக்கி வைத்தார். கர்நாடகத்தை பசிப்பிணி இல்லாத மாநிலமாக மேம்படுத்த இத்திட்டம் உதவிகரமாக இருக்கும் என்று கர்நாடக முதலமைச்சர் திரு. சித்த ராமைய்யா நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். இத்திட்டத்தின் முதல் கட்டமாக பெங்களூர் நகரில் பல்வேறு பகுதிகளில் 101–இந்திரா உணவகங்கள் செயல்படுத்தப்படும் என கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

இந்திய யூனியனுடன் புதுச்சேரி சட்டப்படி இணைந்த நாளான டிஜூர் இணைப்பு தினம் புதுவையில் இன்று கொண்டாடப்பட்டது. பிரெஞ்ச் ஆட்சியின் இருந்து 1954–அக்டோபர் 18–ஆம் தேதி அன்றே புதுவை விடுதலை பெற்றுவிட்ட போதிலும் இது தொடர்பாக இந்திய–பிரெஞ்ச் அரசுகளுக்கு இடையே எட்டப்பட்ட ஒப்பந்தத்தை பிரெஞ்ச் அரசு 1962–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16–ஆம் தேதி அன்று தான் ஏற்றுக்கொண்டதால் ஆண்டு தோறும் இந்த நாள் டிஜூர் இணைப்பு தினமாக கொண்டாடப்படுகிறது.

பிரெஞ்ச் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான கருத்து கணிப்பு நடைபெற்ற கீழூர் கிராமத்தில் உள்ள நினைவகத்தில் புதுவை அரசு சார்பில் இன்று நடைபெற்ற

நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. வி. நாராயணசாமி தேசிய கொடியை ஏற்றிவைத்து ஆயுதக் காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டார்.

இந்திய யூனியனுடன் புதுச்சேரியை இணைப்பதற்கான ஒப்பந்தம் நேரு ஆட்சிக் காலத்தில் கையெழுத்தானதை தொடர்ந்தே புதுச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்ததாக நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கும் பிரான்சிற்கும் இடையில் இன்று வரை பல தொடர்புகள் இருப்பதாக குறிப்பிட்ட அவர் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சியில் புதுவைக்கு உதவ இன்றும் பிரான்சு முன்வருவதாக கூறினார். பிரெஞ்ச் அரசின் நிதி உதவியுடன் புதுவையில் 1400–கோடி ருபாய் செலவில் பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் வினியோகத் திட்டம் நிறைவேற்றப்படுவதாக அவர் தெரிவித்தார். புதுவைக்கான 1800–கோடி ருபாய் ஸ்மார்ட் நகர திட்டத்திலும் பிரெஞ்ச் அரசு பங்கேற்பதாகவும் இது தொடர்பாக பிரெஞ்ச் தொழிலதிபர்கள் அக்டோபர் மாதம் புதுவைக்கு வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் இதர மாநிலங்கள் 6–சதவிகித அளவில் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் புதுச்சேரி 11.4 சதவிகித வளர்ச்சி விகிதம் காட்டியிருப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார். புதுவையில் தரமான கல்வி மற்றும் மருத்துவ வசதிகளும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் மக்களுக்கு வழங்கப்படுவதாக அவர் கூறினார். தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது போன்ற நிலை புதுவையில் இல்லை என்றும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக இருப்பதால் சுற்றுலாப்பயணிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கு விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகமே காரணம் என குறிப்பிட்ட அவர் தற்போது இந்நிலையை குலைக்க, வெளியில் இருந்து வந்த சில வகுப்புவாத சக்திகள் முயலுவதால் இளைய தலையினர் விழிப்புடன் இருந்து இம்முயற்சிகளை முறியடிக்க வேண்டும் என்றார். புதுவையில் ஜாதி, மத கலாச்சார வேறுபாடுகளை மீறி அனைவரும் ஒன்றாக இருப்பதை வெளிநாட்டினரே கண்டு வியப்பதால் மக்களைப் பிளக்கும் சக்திகளை நாம் ஒரு போதும் அனுமதிக்க கூடாது என்றும் முதலமைச்சர் வலியுறுத்தினார். கிழுரில் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சருடன் மாநில அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு கீழுர் கருத்து கணிப்பில் பங்கேற்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

டிஜுர் இணைப்பு நாளை ஒட்டி புதுவையில் இன்றைய தினம் பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

புதுவைக்கும் ஹைதராபாத்திற்கும் இடையே தனியார் விமான சேவை 2–ஆண்டு இடைவெளிக்கு பின்னர் இன்று மீண்டும் தொடங்கி உள்ளது. விமான நிலையத்தில் இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. வி. நாராயணசாமி மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கல் கலந்து கொண்டு முதலாவது விமானத்தில் பயணிக்க வந்த பயணிகளை மாலை அணிவித்து வரவேற்றனர். அனைத்து 74–பயணிகளுக்கும் விமானத்தில் ஏறுவதற்கான நுழைவுச் சீட்டுக்களை முதலமைச்சர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஹைதராபாத்தை தொடர்ந்து கொச்சி பெங்களூர் மற்றும் திருப்பதிக்கும் விரைவில் விமான சேவை தொடக்கப்படும் என்றார். புதுவைக்கும் புதுடெல்லிக்கும் இடையே விமான சேவை தொடக்கவும் உத்தேசம் இருப்பதாக அவர் தெரிவித்தார். புதுவையில் விமான சேவை மீண்டும் தொடங்குவதால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார். இதுபோலவே புதுச்சேரி துறைமுகத்தை சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தின் துணை துறைமுகமாக மேம்படுத்தவும் மத்திய நிதி உதவியுடன் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கப்பல்கள் சென்றுவர ஏதுவாக துறைமுக முகத்துவாரத்தை ஆழப்படுத்தும் பணிகள் பூர்த்தியாகிவிட்டதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் துணைசபாநாயகர் திரு. சிவக்கொழுந்து காங்கிரஸ்–திமுக எம்.எல்.ஏக்கள் தலைமைச் செயலர் திரு. மனோஜ் பரிடா மற்றும் மூத்த காவல்துறை அதிகாரிகளும் விமான சேவை துவக்க விழாவில் கலந்து கொண்டனர்.

புதுவைக்கும் ஹைதராபத்திற்கும் இடையிலான தினசரி விமானம் ஹைதராபாத்தில் இருந்து முற்பகல் 11.20 க்கு புதுச்சேரி வந்து சேர்ந்து புதுவையில் இருந்து முற்பகல் 11.40 க்கு மீண்டும் புறப்படும். பிற்பகல் 1.10 க்கு இந்த விமானம் ஹைதராபாத் சென்று அடையும். விமானக் கட்டணம் 2449– ருபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதுவையில் மூளைச்சாவினால் இறந்து போன 50–வயது நபர் ஒருவரின் இரு கரங்களை ஏற்கனவே கைகளை இழந்த 16–வயது இளைஞர் ஒருவருக்கு 16–மணி நேர அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பொருத்திய ஜிப்மர் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுனர் டாக்டர் தினேஷ் குமார் மற்றும் அவரது குழுவினருக்கு மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா பாராட்டு தெரிவித்துள்ளார். மத்திய அமைச்சர் சார்பில் அவரது மனைவி திருமதி. மல்லிகா நட்டா பயனாளியை நேரில் பார்க்க ஜிப்மருக்கு வந்ததாகவும், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள பயனாளியுடன் தொலைநிலை தொடர்பு மூலம் அவர் பேசியதாகவும் ஜிப்மர் செய்தி குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூளைச்சாவினால் இறந்து போனவரின் மனைவி ரத்தினாம்பாள் படிக்காதவர் – ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும் கணவரின் உடல் உறுப்புகளை உடனடியாக தானம் செய்ய முன் வந்தது பாராட்ட தக்கது என்று திருமதி. மல்லிகா நட்டா பாராட்டினார். மூளைச்சாவினால் இறந்து போனவரின் கரங்களை மற்றொருவருக்கு பொருத்தும் அறுவை சிகிச்சை ஜிப்மர் மருத்துவமனையில் ஆகஸ்ட் 2–ஆம் தேதி இலவசமாக மேற்கொள்ளப்பட்டது. நாட்டிலேயே இத்தகைய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ள முதலாவது அரசு மருத்துவமனை ஜிப்மர் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திமுக தலைவர் திரு கருணாநிதி இன்று சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிறு சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் 2–மணி நேரத்தில் வீடு திரும்பினார். ஏற்கனவே திரு. கருணாநிதியின் கழுத்தில் பொருத்தப்பட்டுள்ள உணவு செலுத்தும் குழாயை மாற்றும் சிகிச்சை இன்று மேற்கொள்ளப்பட்டதாக மருத்துவமனை நிர்வாகம்

தெரிவித்துள்ளது. 94–வயதான திரு. கருணாநிதி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின்னர் வீட்டிலேயே சிகிச்சை மற்றும் ஓய்வில் இருந்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் அந்நாட்டு அரசால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை நேரில் ஆராய்ந்து மீண்டும் இந்தியாவிற்கு எடுத்து வரும் நிலையில் படகுகள் உள்ளதா என்பதை கண்டறிய தமிழக அரசின் நீர்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு. சமீரன் தலைமையில் 7– உறுப்பினர் குழு ஒன்று நாளை இலங்கை செல்கிறது. ராமேஸ்வரம்,புதுக்கோட்டை மற்றும் நாகை மாவட்ட மீனவர் பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம்பெறுவார்கள் என்று மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு. ஐசக் ஜெயக்குமார் இன்று ராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 75–தமிழக மீனவர்களும் 42–படகுகளும் விடுவிக்கப்படும் என கடந்த ஜுலை 29–ஆம் தேதி இலங்கை அரசு அறிவித்ததும் இதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இம்மாதம் 4–ஆம் தேதி தாயகம் திரும்பியதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மெட்ரோ ரயில் திட்டத்தை நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு நீட்டிப்பதற்கான புதிய மெட்ரோ ரயில் கொள்கையை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

புதுவையில் டிஜுர் இணைப்பு தினம் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

புதுவைக்கும் – ஹைதராபாத்திற்கும் இடையே தனியார் விமான சேவை இன்று முதல் மீண்டும் தொடங்கி உள்ளது.

புதுவையில் கரமாற்று அறுவை சிகிச்சியை வெற்றிகரமாக செய்து முடித்துள்ள ஜிப்மர் நிபுணர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே.பி. நட்டா வாழ்த்து தெரிவித்துள்ளார்.